## தலைப்பு 253 – ஓய்வூதியத் திணைக்களம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஓய்வூதியத் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் ஓய்வூதியத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2021 ஜுலை 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2021 ஒக்தோபர் 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினை தவிர்த்து, நிதிக் கூற்றுக்களில் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல்கள் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை காட்டுகின்றன என்பது என அபிப்பிராயம் ஆகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்பட்டுள்ளது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளில் நியாயமத் தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்யப்பட்டது.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) இவ்வறிக்கையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது தொடர்பாக நான் மேற்கொண்ட இந்த அறிக்கையின் 2.1(அ), (ஆ), (இ), (உ), 2.3 (ஏ), (ஐ), 2.5 (உ), (ஊ), (எ), (ஏ) பந்திகளின் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 வருமானம் அல்லாத பெறுவனவுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது ஏனைய நிறுவனங்களுக்காக 4 வருமானக் குறியீடுகளின் கீழ் திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்டிருந்த, கூட்டுத்தொகை ரூபா 1,024,621,786 தொகைக்கான வருமானம் நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானம் அல்லாத பெறுவனவுகளின் கீழ் ஏனைய பெறுவனவுகள் என காட்டப்பட்டிருக்காமையால் நிதிச் செயலாற்றல் கூற்றில் மொத்தப் பெறுவனவுகளின் பெறுமதி அதே தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | நிதிச் செயலாற்றல் கூற்று தயாரிக்கும் போது (253) வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரின் குறியீட்டு இலக்கத்தின் கீழ் உள்ள வருமான மதிப்பீடு மாத்திரம் கவனத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது. அவதானிப்பில் குறிப்பிடப்பட்டு குறியீட்டு இலக்கங்களுக்கான வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களம் ஆக காணப்பட்டமையால் அந்த வருமானம் ஏனைய பெறுவனவுகளாக நிதிச் செயலாற்றல் கூற்றில் உட்படுத்தப்படுவதில்லை. | ஏனைய நிறுவனங்களுக்காக சேகரிக்கப்பட்டிருந்த வருமானம் நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானம் அல்லாத பெறுவனவுகளின் கீழ் ஏனைய பெறுவனவுகள் என காட்டப்பட வேண்டும். |

**1.6.2 மீண்டுவரும் செலவுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆண்டிற்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பிரயாணச் செலவுகள் ரூபா 2,397,956 தொகை நிதிச் | உள்நாட்டு பிரயாணச் செலவு (1101) மற்றும் வெளிநாட்டு பிரயாணச் செலவு (1102) | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பிரயாணச் செலவுகள் ஏனைய |

| | | |
|---|---|---|
| செயலாற்றல் கூற்றில் ஏனைய பண்டங்கள் மற்றும் சேவைகளுக்கான செலவுகளின் கீழ் காட்டப்பட வேண்டியிருந்த போதிலும், அச் செலவு சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் மற்றும் ஏனைய ஊழியர் நலன் செலவுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தமையால் அப் பெறுமதியினால் சம்பளங்கள், வேதனங்கள் ஏனைய ஊழியர் நலன்கள் செலவுகள் மிகையாகவும், ஏனைய பண்டங்கள் மற்றும் சேவைச் செலவுகள் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. | சம்பளங்கள் வேதனங்கள் மற்றும் ஊழியர் நலன்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | பண்டங்கள் மற்றும் சேவைச் செலவுகளின் கீழ் காட்டப்பட வேண்டும். |

**1.6.3 ஆதனங்கள் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியிலுள்ளவாறு, 2 நிலையான சொத்துக்களின் ஸிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் படி பெறுமதி ரூபா 59,767,636 தொகை மற்றும் நிதிக்கூற்றின் படி அப் பெறுமதி ரூபா 74,977,453 தொகையாக காணப்பட்டமையால் நிதிக் கூற்றுக்களின் படி பெறுமதி ரூபா 15,209,817 தொகை மிகையாகவும், 04 நிலையான சொத்துக்களின் ஸிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் படி பெறுமதி ரூபா 125,931,241 தொகை மற்றும் நிதிக் கூற்றின் படி பெறுமதி ரூபா 102,556,055 தொகையாக காணப்பட்டமையால் நிதிக் கூற்றின் படி பெறுமதி ரூபா 23,375,186 தொகை குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. இதன் காரணமாக நிதிக்கூற்று மற்றும் ஸிகாஸ் நிகழ்ச்சித் திட்டம் இடையே நிலையான சொத்துக்களில் ரூபா 8,165,369 இற்கான தேறிய வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | இந்த வித்தியாசத்தை சரி செய்வதற்காக அரச கணக்குத் திணைக்களத்தினால் பெற்றிருந்த அறிவுரைகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டமையால் 2021 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது இது சரி செய்யப்படுகின்றது. | ஸிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் காணப்படும் நிலையான சொத்துக்கள் மொடியுளின் படி பெறுமதி மற்றும் நிதிக் கூற்றுக்களின் படி பெறுமதிகள் சமமாக இருக்க வேண்டும். |

### 1.6.4 ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் அடங்கிய பிணைப் பதிவேடு ஒன்று தயாரித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 891(1) படி பிணைப் பதிவேடு ஒன்று தயாரித்தல் தொடர்பாக பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 2019/09 படி அரசாங்க சேவை, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சுச் செயலாளரிடம் ஆலோசனை கேட்டு பிணைப்பதிவேடொன்று பேணுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அடங்கக்கூடிய விதமாக பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர் தொடர்பாக பிணைப் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருமானக் குறியீட்டு இலக்கங்கள் 20.04.01.00 கீழ் மீளாய்வாண்டின் போது ரூபா 13,563,414 தொகையான திருப்பி செலுத்தப்பட்ட வருமானத்தை உறுதிப்படுத்துவதற்காக 2001 ஜனவரி 15 திகதிய 01/2001 இலக்கங் கொண்ட ஓய்வூதியச் சுற்றறிக்கையின் பிரிவு 1(அ) இன் பிரகாரம் 2021 ஜுன் மாதம் வரை குறிப்பிட்ட நிறுவனங்களிலிருந்து வரவு அறிவித்தல்கள் பெற்றிருக்கவில்லை. | வருமானக் கணக்கிற்கு வரவு வைத்தல் தொடர்பாக குறிப்பிட்ட நிறுவனங்களில் இருந்து வரவு அறிவித்தல் கோரப்பட்டிருந்ததுடன், தொழில், நில அளவை மற்றும் விவசாயத் திணைக்களங்கள், அரசாங்க சேவை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, குருநாகல், பொலன்னறுவை மற்றும் கம்பஹா மாவட்ட செயலகங்கள், தேர்தல்கள் ஆணைக்குழு, அரசாங்கக் கணக்குத் திணைக்களம் என்பன தற்போது வரவு அறிவித்தல்கள் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் வரவு அறிவித்தல் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2015 ஜுலை 20 திகதிய 01/2015 இலக்கம் கொண்ட அரச நிதிக் கொள்கைச் சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கு உரிய வருமான குறியீடுகளுக்குரிய மாதாந்த அறிக்கை தொடர்ந்து வரும் மாதத்தின் 10 ஆம் திகதிக்கு முன்னர் அரச நிதிக் | மாதாந்த அறிக்கைகள் திறைசேரிக் கணக்குக் கூற்றுக்களுடன் இணக்கஞ் செய்த பின்னர் அரச நிதிக் கொள்கை பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதுடன், அந்த மாதாந்த திறைசேரி கணக்குக் கூற்று அரச கணக்குத் திணைக்களத்தின் இணைய தளத்திற்கும் விடுவித்தல் மேற்கொள்ளப்படுவது நடைமுறை | சுற்றறிக்கையின் பிரகாரம் மாதாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என. |

கொள்கை பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் வருமானக் குறியீட்டு இலக்கங்கள் 20:04:01:00 இற்கான 07 மாதங்களுக்கான மாதாந்த செயலாற்றல் அறிக்கை 41 நாட்கள் 107 நாட்கள் இடைப்பட்ட கால வீச்சில் தாமதத்துடன், சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

மாதாத்திற்கு பின் வரக்கூடிய மாதத்தில் 14 – 17 திகதி வீச்சில் காணப்பட்டதும், உலகளாவிய COVID 19 தொற்றுநோய் காரணமாக 2020 ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக கடமை மேற்கொள்ளல் வீழ்ச்சியடைதல் காரணமாக இருந்தது.

(இ) வருமானக் குறியீட்டு இலக்கம் 20:04:02:00 கீழ் மாகாண சபைகளில் இருந்து விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்திற்காக பங்களிப்புத் தொகை பெற்றுக்கொள்ளல் மற்றும் நிலுவை பங்களிப்புத் தொகை நிறுவனத்தின் படி போலவே பங்களிப்பாளரின் படியும், அறுதியாக இனங்காணக்கூடிய விதமாக பொருத்தமான தரவு முறைமை ஒன்று தயாரித்திருக்கவில்லை.
உள்ளூராட்சி நிறுவனங்களினால் நிலுவை வருமானம் என அறிவிக்கப்பட்டிருந்த பெறுமதி நிதிக் கூற்றுக்களில் நிலுவை வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 823,984,589 தொகைக்கான நிலுவை வருமானத்தின் உண்மைத் தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு முடியாமல் போனது. மேலும், மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட ரூபா 11,021,652,894 தொகைக்கான பங்களிப்புப் பெறுவனவு பங்களிப்புக் கணக்கின் படி தனியாக இனங்காண முடியாமல் இருந்தது. அதன் படி விதவைகள்/தபுதாரர்கள் ஓய்வூதியம் செலுத்தும் போது மற்றும் பங்களிப்புத் தொகையை திருப்பிச் செலுத்தும் போது

ஏற்றுக்கொள்கின்றேன், அனைத்து அரச உத்தியோகத்தர்களினதும அடிப்படைத் தகவல்கள் அடங்கிய தரவு முறைமை ஒன்று வடிவமைப்பதற்காக நிகழ்வுநிலை நடைமுறை ஒன்றினூடாக தரவுகள் உட்படுத்தக்கூடிய நிகழ்ச்சித் திட்டம் ஒன்று 2017 ஒக்தோபர் மாதம் முதல் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், அரச துறையின் ஏனைய நிறுவனங்களின் இருந்து ஒத்துழைப்பு இன்மையால் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துவது செயலிழந்துள்ளது. தற்போது விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்திற்காக பங்களிப்புத் தொகை அறவீடு செய்தல் தொடர்பாக விபரங்கள் தனிப்பட்ட கோப்பில் உட்படுத்துவது தொடர்பாக 2020/12/31 திகதிய 03/2020 கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கை மற்றும் பழைய அங்கத்தவர்களை நிகழ்வு நிலை ஊடாக மீண்டும் பதிவு செய்தல் தொடர்பாக 2020/02/10 திகதிய இலக்கம் 26/2017(V) இலக்கம் கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டிருந்தது. அதன் படி பங்களிப்புத் தொகை திருப்பி செலுத்துதல் ஆகிய நலன்களை உரித்தாக்கும் போது பங்களிப்புத் தொகை அறுதியாக மற்றும் தொடர்ச்சியாக கிடைக்கப் பெற்றதா என உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

பங்களிப்பாளர் மற்றும் பங்களிப்பு செலுத்துவது தொடர்பாக தரவு முறைமை ஒன்று தொடர்புடைய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் ஓய்வூதியத் திணைக்களத்தினால் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என.

| | | | |
|---|---|---|---|
| | பங்களிப்புத் தொகை அவ்வவ் நபர்களிடம் தொடர்ச்சியாக பெற்றுக்கொள்ளப்பட்டதா என திணைக்களத்தின் ஊடாக உறுதிப்படுத்துவதற்கு முடியாமல் இருந்தது. அதேபோல், நிலுவை வருமானத்தை தாமதம் இன்றி அறவீடு செய்வதற்கும், அதற்கான தேவையான ஏற்பாடுகள் தயாரிப்பதற்கும் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு முடியாமல் இருந்தது. | | |
| (ஈ) | 2001 ஜனவரி 15 திகதிய 01/2001 இலக்கம் கொண்ட ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பிரிவு 2.2 இன் பிரகாரம் மாகாண சபையினால் அனைத்து அலுவலகங்களின் பங்களிப்புத் தொகைக்காக ஒரு காசோலை வழங்கப்படும் போது ஒவ்வொரு மாதத்தினதும் அறவீடுகள் தொடர்ந்து வரும் மாதத்தின் 15 திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 05 மாகாண சபைகளினால் 29 சந்தர்ப்பங்களில் 15 நாட்கள் முதல் 96 நாட்கள் வரை தாமதத்துடன் அனுப்பப்பட்டிருந்ததுடன், தென் மாகாண சபை மற்றும் ஊவா மாகாண சபையினால் ஒவ்வொரு மாதத்திற்கான பங்களிப்பும் அனுப்பும் போது, ஒரே தடவையில் அனுப்பாமல் பகுதிகளாக அனுப்பப்படுவதனால் குறிப்பிட்ட திகதியை விட 16 நாட்கள் 132 நாட்கள் இடைப்பட்ட கால தாமதத்துடன் அனுப்பியிருந்த 20 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது. | பங்களிப்புத் தொகை ஒதுக்கப்படுவது சம்பளம் செலுத்தப்படும் சந்தர்ப்பத்திலாக இருப்பதனால் அடுத்த மாதம் 20 திகதி வரை கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. கடிதங்கள் மூலம் திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களம், தேசிய பாதீட்டுத் திணைக்களம், ஆளுனர்களின் செயலாளர்கள் மற்றும் மாகாண தலைவர்களுக்கு பல சந்தர்ப்பங்களில் அறிவுறுத்தப்பட்டது. தென் மற்றும் ஊவா மாகாண சபைகளில் அரச நிறுவனங்களில் விதவைகள் அநாதைகள் பங்களிப்புத் தொகை மாதாந்த கணக்குப் பொழிப்பின் ஊடாக சேகரிக்கப்பட்டு ஒற்றை காசோலை ஆக அனுப்பப்பட வேண்டியிருந்த போதிலும் மாதாந்தக் கணக்குப் பொழிப்புகளில் தவறுகளை சரி செய்யும் வரை மதிப்பீட்டுப் பெறுமதியை அனுப்பி பிழைகளை சரி செய்த பின்னர் மீதியான தொகை அனுப்பப்படுகின்றது. | குறிப்பிட்ட தினத்தில் பங்களிப்புத் தொகை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என. |

| | | | |
|---|---|---|---|
| (உ) | தேசிய வீடமைப்பு அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை ஆகிய நிறுவனங்களில் இருந்து 2009 ஆண்டு முதல் 2015 திசெம்பர் 31 வரையான காலப்பகுதி தொடர்பாக நிலுவைக் கட்டட வாடகை ரூபா 24,605,333 தொகையாக இருந்தது. இந்த வாடகை செலுத்துவதற்கு குறிப்பிட்ட வாடகை உடன்படிக்கை அல்லது மாதாந்தம் வழங்கப்படும் இன்வொயிஸ் அல்லது வேறு ஏதேனும் ஆவணங்களின் பிரதிகள் சமர்ப்பிக்கும் படி மேற்கூறிய நிறுவனங்களினால் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு கோரியிருந்த போதிலும், அவ்வாறான ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு திணைக்களத்திற்கு முடியாமல் இருந்தது. | ஓய்வூதியத் திணைக்களத்தின் தொடர் கட்டடத்தின் உரிமை அரசாங்க சேவை, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு சொந்தமாக காணப்படும் சந்தர்ப்பத்தில் இந்த நிறுவனங்கள் வாடகை அடிப்படையில் நடாத்திச் செல்வதற்கு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2006 நவம்பர் 01 திகதி முதல் கட்டடத் தொகுதியின் உரிமை ஓய்வூதியத் திணைக்களத்திற்கு உரித்தாக்கப்பட்ட போதிலும் மேற்கூறிய நிறுவனங்களுடன் காணப்பட்ட வாடகை உடன்படிக்கைகள், நிலுவைத் தொகை தொடர்பான ஆவனங்கள் வழங்கப்படவில்லை. ஓய்வூதியத் திணைக்களம் இந்த நிறுவனங்களுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்படாமையால் திணைக்களத்திடம் வாடகை உடன்படிக்கைகள் காணப்படவில்லை என அறிவிக்கின்றேன். | 2006.11.01 திகதி முதல் கட்டடத் தொகுதியின் உரிமையை ஓய்வூதியத் திணைக்களத்திற்கு உரித்தாக்கிய சந்தர்ப்பத்தில் வாடகை உடன்படிக்கைகள் மற்றும் நிலுவைத் தொகைக்கான ஆவணங்கள் மற்றும் தகவல்கள் அரச சேவை மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. மற்றும் நிலுவைக் கட்டட வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |
| (ஊ) | 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வளவில் வாடகை அடிப்படையில் நடாத்தப்பட்டு வரும் 07 நிறுவனங்களினால் செலுத்தப்பட வேண்டியிருந்த நிலுவை வாடகை வருமானத்தின் கூட்டுத்தொகை ரூபா 2,036,600 தொகை காணப்பட்டதுடன், காலப் பகுப்பாய்வின் படி நிலுவைக் காலப் பகுதி ஒரு வருடத்தை மிகையான பெறுமதி ரூபா 299,000 தொகை ஆகும். | 2020 ஆண்டின் கொவிட் தொற்றுநோய் நிலைமையின காரணமாக அலுவலகம் அமைந்துள்ள மாலிகாவத்தை பகுதி நான்கு மாதங்களை விட மிகையான காலம் தனிமைப் படுத்தப்பட்டு காணப்பட்டமையால் வாடகை அடிப்படையில் நடாத்தப்பட்டு வந்த நிறுவனங்களின் அலுவலக அலுவல்கள் நடைபெற்றிருக்காமையால் வாடகைத் தொகை 2020 திசெம்பர் 31 திகதி வரை செலுத்துவதற்கு முடியாமல் போனது. | நிலுவைக் கட்டட வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என. |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புகளை அணுகுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலக்கம் 253-1-2-4 கொண்ட ஓய்வூதியம் பெறுவோருக்கு பணிக்கொடைக் கொடுப்பனவு செய்யும் செலவு விடயத்தின் கீழ் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மீதி ஏற்பாடுகள் ரூபா 5,349,310,643 தொகை எனினும், அந்த செலவு விடயத்தின் கீழான பொறுப்புக்கள் கூற்றின் படி ரூபா 5,392,442,185 தொகையாக காணப்பட்டமையால் ஏற்பாடுகளை மிகைத்துள்ள பொறுப்புக்கள் ரூபா 43,131,542 தொகையாக காணப்பட்டது. | 2020 ஆண்டின் போது பணிக்கொடை செலுத்துவதற்காக திறைசேரியில் இருந்து கட்டுநிதிகள் போதியளவு கிடைக்காமையால் திறைசேரியினால் மேலதிக ஏற்பாடுகள் பெற்றுக்கொள்ளல் அல்லது நி.பி. 66 இன் கீழ் ஏற்பாடுகள் மாற்றிக்கொள்ளல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மீதி ஏற்பாடுகளை மிகைக்காதவாறு பொறுப்புக்கள் பேணப்பட வேண்டும் என |

## 2.3 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட்ட உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 38 இன் ஏற்பாடுகளின் படி கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், அதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | திணைக்களம் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணப்படுகின்றதென கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தவேண்டியிருந்துடன் அம் முறைமையின் ஆக்கபூர்வ தன்மை தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன்படி முறைமை பயன்தரு விதமாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதெனவும், அம் மீளாய்வுகள் எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான | ஓய்வூதியத் திணைக்களத்தின் கருமங்கள் தொடர்பாக செலவுகள் மேற்கொள்ளல் மற்றும் வருமானம் சேகரிப்பதற்கான அதிகாக் கையளிப்பு அளித்தல் நிதிப் பிரமாணங்களின் படி மேற்கொள்ளப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் ஓய்வூதியம் செலுத்தும் செயற்பாடு தொடர்பாக மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு காலத்துக்கு காலம் உள்ளகக் கட்டுபாடு செயற்பாடுகளில் | 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பிரிவு 38 இன் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | |
| (ஆ) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையானவாறு குறிப்பிட்ட காலப் பகுதியில் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதில் வழங்குதல் மேற்கொள்ளப்படுகின்றது என கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தி வேண்டியிருந்த போதிலும் 2020 நிதியாண்டிற்காக வழங்கப்பட்ட 17 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் அனுப்பியிருக்காததுடன், அந்த கணக்காய்வு ஐயவினாகளுடன் தொடர்புடைய விளக்கமளிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பெறுமதி ரூபா 45,980,603 தொகையாக காணப்பட்டது. | கணக்காய்வு ஐயவினாக்களில் சுட்டிக் காட்டியிருந்த குறைபாடுகள் ஏனைய அரச நிறுவனங்களுக்கு அறிவித்து சரி செய்த பின்னர் பதில் வழங்க வேண்டியிருந்தமையால் மற்றும் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் கீழ் குறைந்த பதவியணி ஒன்று சேவைக்கு அழைக்கப்படல் ஆகிய காரணங்களினால் பதில் அனுப்புவதில் தாமதம் ஏற்பட்டதனால் கால தாமதம் ஏற்பட்டதை ஏற்றுக்கொள்கின்றேன். பதில் வழங்கியிருக்காத கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | - மேற்படி - |

**2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை**

| | அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை | | |
| | ------------------------------------- | ------------------------- | --------------------------- | ------------------------------------- |
| (i) | 2015 செப்தம்பர் 14 திகதி மற்றும் 2011 நவம்பர் 04 திகதிய இலக்கம் 09/2015 மற்றும் 08/2011 கொண்ட ஓய்வூதிய சுற்றறிக்கைகள் | தற்போதைய முகவரிகள் தொடர்பாக தகவல்கள் காணப்படாமை மற்றும் பராயமடையாதவர்களுக்கு பலமுறை அறிவித்த போதும் பாஸ் புத்தகத்தை பெற்றுக்கொள்வதற்காக வந்திருக்காமை ஆகிய காரணங்களினால் திம்பிரிகஸ்யாய, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மற்றும் யடிநுவர ஆகிய 03 பிரதேச செயலகங்களை சேர்ந்த 22 | இந்த பராயடையாதவர்களின் தற்போதைய முகவரிகள் தொடர்பான தகவல்கள் கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் வங்கிகள் மூலம் பெற்றுக்கொண்டு கணக்குகளில் உரிமையாளர்களுக்கு பாஸ் புத்தகங்களை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், வயது 18 வருடங்களை பூர்த்தியடைந்துள்ள ஆட்களின் பாஸ் புத்தகங்களை | வயது 18 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள ஆட்களின் தற்போதைய முகவரிகள் தொடர்பாக தகவல்கள் கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் வங்கியின் மூலம் பெற்று உரிய கணக்குகளின் உரிமையாளர்களுக்கு பாஸ் புத்தகங்களை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பாராயமடையாதவர்களின் வயது 18 வயதை பூர்த்தியடைந்திருந்த போதிலும் பராயமடையாதவர்களின் பாஸ் புத்தகங்கள் உரிய நபர்களிடம் ஒப்படைத்திருக்கவில்லை. அவற்றில் 20 பாஸ் புத்தகங்களின் நாளதுவரை ஆக்கப்பட்ட நாட்களுக்குரிய கூட்டுப் பெறுமதி ரூபா 2,145,720 தொகையாக காணப்பட்டது. | ஒப்படைப்பதற்காக கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், பாஸ் புத்தகத்தை பெற்றுக்கொள்வதற்காக வரும்படி பல தடவைகள் கடிதங்களின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதும் இதுவரை வந்திருக்கவில்லை எனவும் குறிப்பிட்ட பிரதேச செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ii) | 2013 திசெம்பர் 03 திகதி மற்றும் 6/2013 இலக்கம் கொண்ட ஓய்வூதியச் சுற்றறிக்கை மற்றும் 2011 ஜூன் 14 திகதிய ஓய்வூதிய சுற்றுநிருப இலக்கம் 02 | செலுத்தப்படாத ஓய்வூதியம் குறிப்பிட்ட மாதத்திற்கு பின்னைய மாதத்தில் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்படாமல் திம்பிரிகஸ்யாய மற்றும் ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலகங்களின் ஓய்வூதியப் பிரிவினால் ரூபா 1,848,838 இற்கான தொகையொன்று 07 மாதங்கள் முதல் 14 மாதங்கள் வரையான காலம் பிரதேச செயலகத்தின் பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | பொது வைப்புக் கணக்கில் இருந்த ஓய்வூதியப் பணம் அனுப்பப்பட்டுள்ளது எனவும், எதிர்காலத்தில் குறிப்பிட்ட தினத்தில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளரினாலும், செலுத்தப்பட்ட பணம் வங்கியினால் திருப்ப அனுப்புவதற்கு குறிப்பிட்ட காலம் செலவாகும் என 03 மாதங்களுக்குள் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என ஹாரிஸ்பத்து பிரதேச செயலாளரினாலும் அறிவிக்கப்பட்டிருந்தது. | செலுத்தப்படாத ஓய்வூதியம் குறிப்பிட்ட மாதத்திற்கு பின்னைய மாதத்தில் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.5 வஞ்சகத் தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2011 மே 16 திகதிய ஓய்வூதிய சுற்றறிக்கையின் 04/2011, 2012 திசெம்பர் 20 திகதிய ஓய்வூதிய சுற்றறிக்கையின் சுற்றறிக்கை இலக்கம் 05/2012 மற்றும் 2014 நவம்பர் 03 திகதிய ஓய்வூதிய சுற்றறிக்கையின் 13/2014 ஆகிய சுற்றறிக்கைகளின் படி பல ஓய்வூதியங்களை ஒன்றித்து பெற்றுக்கொள்ளும் போது ஒன்றித்த சம்பளத்திற்கு மாத்திரம் இடைக்காலப் படி செலுத்தப்பட வேண்டும். தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்ட விடயங்களின் படி அதற்கு முரணாக கடான பிரதேச செயலகத்தின் 03 ஓய்வூதியம் பெறுவோருக்கு இடைக்கால கொடுப்பனவு என மிகையாக செலுத்தப்பட்டிருந்த பெறுமதியில் 2021 ஜூன் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 867,317 தொகை நிலுவையாக காணப்பட்டதுடன், வாரியப்பொல பிரதேச செயலகத்தினால் 03 ஓய்வூதியம் பெறுவோருக்கு மிகையாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 623,750 தொகைக்கான இடைக்கால கொடுப்பனவு 2021 ஜூன் வரை அறவீடு செய்திருக்கவில்லை. | கடான பிரதேச செயலகத்தினால் மிகையாக செலுத்தப்பட்டிருந்த இடைக்கால கொடுப்பனவு பின்வருமாறு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.<br><br>**22- /01-801214**<br>2020 நவம்பர் மாதம் முதல் ரூபா 6,951.46 இற்கான மாதாந்த தவணைகளாக அறவிடப்பட்டு வருகின்றது. மேலும் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 356,888 தொகையாகும்.<br><br>**01-800947/ 12-801996**<br>2020 ஒக்தோபர் மாதம் முதல் ரூபா 6,930.62 இற்கான மாதாந்த தவணைகளாக அறவிடப்பட்டு வருகின்றது. 2021 ஜூன் 30 திகதி அளவில் மேலும் அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 357,055 ஆகும்.<br><br>**21-800010/ 12-1770**<br>2020 ஒக்தோபர் மாதம் முதல் ரூபா 5,791.67 இற்கான மாதாந்த தவணைகளாக அறவிடப்பட்டு வருகின்றது. 2021 ஜூன் மாதம் 30 திகதி அளவில் மேலும் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 156,374 ஆகும்.<br><br>வாரியபொல பிரதேச செயலகம்<br>ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள | மிகைக் கொடுப்பனவுகள் ஏற்படாதவாறு ஓய்வூதிய தரவு முறைமையை முன்னேற்ற வேண்டியிருந்ததுடன், நிதிப் பிரமாணம் 103, 104 பிரகாரம் நடவடிக்கை எடுத்து நட்டத்தை அறவீடு செய்ய வேண்டும் என. |

| | | | |
|---|---|---|---|
| | | ஓய்வூதியம் பெறுவோருக்கு மிகையாக செலுத்தப்பட்டிருந்த இடைக்கால கொடுப்பனவை அறவீடு செய்வதற்கு தவணைகளை தீர்மாணிப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளது. | |
| (ஆ) | தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட விடயங்களின் படி இறப்புகளை தாமதமாக அறிவிப்பதன் மூலம் ஓய்வூதியம் மிகையாக செலுத்தப்பட்டுள்ளதா என பரிசோதனை மேற்கொள்ளாமையால் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தின் ஓய்வூதியம் பெறுபவர் ஒருவருக்கு ரூபா 352,030 இற்கான ஓய்வூதியம் மிகையாக செலுத்தப்பட்டிருந்ததுடன், கணக்காய்வுத் திகதி அளவிலும் அந்த மிகைக் கொடுப்பனவை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மிகையாக செலுத்தப்பட்டுள்ள ஓய்வூதியத் தொகையை மீண்டும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி 2021.01.06 திகதி வாரிசுக் காரர்களுக்கு கடிதம் மூலம் அனுப்பப்பட்டது. | - மேற்படி - |
| (இ) | ஓய்வூதியம் பெறுவோர் இறந்த பின்னர் அறிவித்தல் தாமதம் அடைந்திருந்த காரணத்தினால் ஓய்வூதியம் மிகையாக செலுத்தப்பட்டிருந்த போதிலும் ஏ டீ ஏம் காடின் மூலம் பணம் பெற்றுக்கொள்ளல் மற்றும் வங்கிக் கணக்குகள் கூட்டுக் கணக்காக காணப்பட்டமையால் வேறு நபர்களினால் முறைகேடாக அந்தப் பணம் பெற்றுக்கொள்ளல் போன்ற சந்தர்ப்பங்களில் வங்கிக் கணக்கில் பணம் இன்மையால் மிகையாக செலுத்தப்பட்டிருந்த ஓய்வூதியத்தை அறவீடு செய்வதற்கு முடியாமல் இருந்தது. திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தினால் 16 சந்தர்ப்பங்களில் ரூபா 1,125,600 தொகை பெறுமதியான மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பிரதேச செயலகத்தினால் 13 சந்தர்ப்பங்களில் ரூபா 1,779,112 தொகை என கூட்டுப்பெறுமதி ரூபா 2,904,712 தொகை 2020 திசெம்பர் 30 திகதியில் உள்ளவாறு இவ்வாறு | வங்கியினால் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு வழங்கியிருந்த கடன் தொகைக்காக மீதியான தவணைப் பணங்கள் அந்த ஓய்வூதியத்தில் இருந்து அறவிடப்படுவதனால் இறந்த ஓய்வூதியம் பெறுபவர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த தொகையில் சுமார் 50% அறவிடப்பட்டுள்ளது என பிரதேச செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது. ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பிரதேச செயலகத்தினால் அறவிடப்பட வேண்டியிருந்த தொகையினை அறவீடு செய்வதற்கு குறிப்பிட்ட வங்கிக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதென பிரதேச செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | முறைகேடாக பணம் பெற்றிருந்த நபர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது என தெரிவுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டது. | | |
| (ஈ) | ஓய்வூதியம் பெறுபவர் இறந்த பின்னர் அறிவித்தல் தாமதம் அடைவதன் காரணத்தினால் ஓய்வூதியம்/ விதவைகள் ஓய்வூதியம் மிகையாக செலுத்தியிருந்த சந்தர்ப்பங்களில் கணக்கில் பணம் காணப்படின் மீண்டும் அனுப்பும் படி குறிப்பிட்ட வங்கிக்கு அறிவித்திருந்த போதும் வங்கியினால் பதில் அனுப்பியிருக்காத சந்தர்ப்பத்தில் பணத்தை அறவீடு செய்வதற்காக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எவ்வாறாயினும், தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டவாறு திம்பிரிகஸ்யாய மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பிரதேச செயலகங்களினால் 94 சந்தர்ப்பங்களில் மிகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காத நிலுவைத் தொகை ரூபா 8,643,512 தொகையாக இருந்தது. இவற்றில் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பிரதேச செயலகத்தினால் மிகையாக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு கடந்திருந்த காலம் வருடங்கள் 1 இற்கும் 4 வரையாக இருந்தது. | திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தின் வங்கியினால் ஓய்வூதியம் பெறுவோருக்கு வழங்கியிருந்த கடன்களுக்காக முன்வரக்கூடிய தவணைகளையும் அந்த ஓய்வூதியத்தில் இருந்து அறவிடப்பட்ட காரணத்தினால் இறந்த ஓய்வூதியம் பெறுவோரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த தொகையினை சுமார் 50% அறவிடப்பட்டுள்ளது என பிரதேச செயலாளர் அறிவித்திருந்தார்.<br><br>ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பிரதேச செயலகத்தை சேர்ந்த இறந்த ஓய்வூதியம் பெறுவோரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த தொகையை அறவீடு செய்வதற்கு குறிப்பிட்ட வங்கிக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என பிரதேச செயலாளர் அறிவித்திருந்தார். | - மேற்படி - |
| (உ) | உயிர் வாழ்தல் சான்றிதழ் சமர்ப்பிக்காமையால் 2018 ஜூலை மற்றும் 2019 ஜுன் மாதங்களில் ஓய்வூதியத் திணைக்களத்தினால் ஓய்வூதியம் நிறுத்தப்பட்டிருந்த ஓய்வூதியம் பெறுவோர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தின் இரண்டு ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் கடுவல பிரதேச செயலகத்தின் மூன்று ஓய்வூதியம் பெறுவோர் இறந்தமை தொடர்பாக உயிர் வாழ்வுச் சான்றிதழ் | திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தில் 2019 ஆண்டில் உயிர் வாழ்தல் சான்றிதழ் வழங்காதிருந்த ஓய்வூதியம் பெறுவோர்களில் 2020 ஆண்டின் போதும் தொடர்ந்தும் சன்றுகள் வழங்கியிருக்காவிடின் அவர்களின் ஓய்வூதியத்தை நிறுத்துவதற்காக எதிர்பார்க்கப்பட்ட போதிலும் நிலவுகின்ற COVID 19 தொற்றுநோய் நிலைமையின் மத்தியில் பிரயாணத் தடை | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஓய்வூதியம் பெறுவோர் இறந்தது தொடர்பாக கிராம சேவகர் அல்லது குடும்ப உறவினர்களினால் சம்பளப் பிரிவிற்கு அறிவித்திருக்காமையால் இறந்த நாள் முதல் தலைமை அலுவலகத்தினால் ஓய்வூதியம் நிறுத்தப்படும் வரை கூட்டுப்பெறுமதி ரூபா 2,068,762 இற்கான தொகையொன்று மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு மிகையாக செலுத்தியிருந்த தொகையை இனங்கண்டு நிதிப் பிரமாணம் 103, 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து மீண்டும் அறவீடு செய்வதற்கு பிரதேச செயலகத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணப்பட்டமையால் உயிர் வாழ்தல் சான்றிதழ் பெற்றுக்கொள்வதில் நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டதனால் ஓய்வூதியம் பெறுவோரின் ஓய்வூதியத்தை இடைநிறுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | |
| (ஊ) | யடிநுவர பிரதேச செயலகத்தின் 0-40-3031/0-06-3031 இலக்கம் கொண்ட ஓய்வூதியம் பெறுவோருக்கு 2015 நவம்பர் 01 திகதி முதல் 2020 மார்ச் 31 வரை மிகையாக செலுத்தியிருந்த இடைக்கால கொடுப்பனவு ரூபா 75,250 தொகையாக காணப்பட்டதுடன் 2021 ஜூன் மாதம் முதல் ரூபா 1,500 வீதம் அறவீடு செய்வதற்காக தரவு முறைமையில் உட்படுத்தியிருந்ததுடன், மேலும் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 73,750 ஆக காணப்பட்டது. | மிகையாக செலுத்தப்பட்டிருந்த இடைக்கால கொடுப்பனவு 2021 ஜூன் மாதம் முதல் ரூபா 1,500 வீதம் அறவீடு செய்வதற்காக தரவு முறைமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. | மிகைக் கொடுப்பனவுகள் ஏற்படாதவாறு ஓய்வூதிய தரவு முறைமை முன்னேற்றப்பட வேண்டியதுடன் நிதிப் பிரமாணம் 103, 104 பிரகாரம் செயற்பட்டு நட்டத்தை அறவீடு செய்யப்பட வேண்டும் என. |

| | | | |
|---|---|---|---|
| (எ) | கங்கவட கோரளை பிரதேச செயலகத்தினால் மூலம் இறந்த ஓய்வூதியம் பெறுவோர் ஒருவருக்கு செலுத்தியிருந்த ரூபா 93,600 மிகைக்கொடுப்பனவில் 2021 ஜுலை 01 திகதியில் உள்ளவாறு ரூபா 72,600 மேலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | ஓய்வூதிய இலக்கம் திருமதி பீ.டீ. எக்னஸ் இடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 93,600 இற்கான தொகையை அவர்களின் வாரிசுக்காரர்களினால் மாதாந்தம் ரூபா 5,000 வீதம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமையால் 2021.07.01 திகதியில் உள்ளவாறு செலுத்தியிருந்த தொகை ரூபா 21,000 ஆகும். மேலும் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 72,600 ஆகும். | மேலதிக கொடுப்பனவுகள் நடைபெறாதவாறு இறக்கும் ஓய்வூதியம் பெறுவோரின் தகவல்கள் விரைவாக பெற்றுக்கொள்ளக்கூடிய விதமாக வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டியதுடன் நிதிப் பிரமாணம் 103, 104 பிரகாரம் செயற்பட்டு நட்டத்தை அறவீடு செய்ய வேண்டியுள்ளது என. |
| (ஏ) | பிரதேச செயலகங்களிடையே ஓய்வூதிய கோவைகள் மாற்றப்பட்டிருந்த போதிலும் தரவு முறைமை நாளது வரை ஆக்கப்படாமையால் கங்கவட கோரளை பிரதேசத்தை சேர்ந்த ஓய்வூதியம் பெறும் ஒருவருக்கு 2004 ஆகஸ்ட் முதல் 2019 திசெம்பர் வரை ஓய்வூதிய இலக்கம் 01-603037 மற்றும் 01-1603037 கீழ் இரண்டு ஓய்வூதியங்கள் பிழையான முறையில் செலுத்தப்பட்டிருந்தது. நி.பி.104 விசாரணையின் மூலம் 2008 ஜனவரி முதல் 2019 திசெம்பர் வரை மிகையாக செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 2,169,551 என மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2008 ஆம் ஆண்டிற்கு முன்னரான 41 மாத காலத்திற்காக மிகையாக செலுத்திய ஓய்வூதியத் தொகையின் பெறுமதியை கணக்கீடு செய்திருக்கவில்லை. இந்த ஓய்வூதியம் பெறுபவர் 2021 மார்ச் 02 திகதியில் இறந்துள்ளதுடன் ஓய்வூதியம் நிறுத்தப்பட்ட நாள் முதல் இறந்த நாள் வரை அவரிடம் அறவிடப்பட்ட தொகையை கழித்த பின்னர் மேலும் ரூபா 1,839,320 இற்கு மிகையான தொகை ஒன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | இரட்டை ஓய்வூதியம் செலுத்தியமை தொடர்பாக நி.பி. 104 இன் படி விசாரணை மேற்கொள்ளப்பட்டு மிகையாக செலுத்தியிருந்த தொகை ரூபா 2,169,551 தொகை என மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் மாதம் முதல் ஓய்வூதியம் நிறுத்தப்பட்டதுடன் ஓய்வூதியம் பெறுபவர் 2021 மார்ச் 02 திகதி இறந்துள்ளார். அதன் படி மேலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட தொகை ரூபா 1,839,320.20 தொகையாக காணப்பட்டதுடன், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியம் செலுத்தும் போது அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். | ஓய்வூதியக் கோவை ஒன்று பிரதேச செயலகங்கள் இடையே மாற்றப்படும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் தரவு முறைமை நாளதுவரை ஆக்கப்படுகின்றதான என்பதை தொடர்ச்சியாக பரிசோதனை ஏற்படக் கூடியவாறு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை முன்னேற்ற வேண்டும். நி.பி. 103, 104 பிரகாரம் அனைத்து காலங்களுக்குமாக மிகையாகச் செலத்தப்பட்டிருந்த தொகையினை மதிப்பீடு செய்து மீண்டும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | இலக்கம் 01-603326 மற்றும் 21-500158 மூலம் சிவில் மற்றும் விதவைகள் என 02 ஓய்வூதியங்கள் பெற்றுக் கொண்டிருந்த இறந்த உத்தியோகத்தர் ஒருவருக்கு மிகையாக செலுத்தியிருந்த ரூபா 2,696,303 தொகைக்காக ஓய்வூதியத்தில் 2020 திசெம்பர் 18 திகதி வரை அறவிடப்படாமல் இருந்த தொகை ரூபா 2,388,251 தொகையாக காணப்பட்டது. | பணம் செலுத்துவதை புறக்கணித்திருந்தமையால் அவருக்கு எதிராக கம்பஹா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் இலக்கம் 118/18 கீழ் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டு 24/2019 இலக்கத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என கம்பஹா பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். | மிகை கொடுப்பனவு ஒன்று ஏற்படாதவாறு இறப்பு எய்தும் ஓய்வூதியம் பெறுவோர் தொடர்பான தகவல்கள் விரைவாக பெற்று முறைமையினை நாளது வரை ஆக்குவதற்கு ஏற்றவாறு வேலைத் திட்டம் ஒன்று தயாரித்துக்கொள்ள வேண்டும் என மற்றும் நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 பிரகாரம் நடவடிக்கை எடுத்து பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களிடம் ஏற்பட்டிருந்த நட்டத்தை அறவீடு செய்ய வேண்டும் என. |
| (ஒ) | இலக்கம் 01-600772 கீழ் ஓய்வூதியம் பெற்று வந்த 2013 நவம்பர் 07 திகதி இறந்துள்ள பெண் உத்தியோகத்தர் ஒருவரின் வங்கிக் கணக்கிற்கு இறந்த பின்னர் 29 மாத காலம் வரை ரூபா 582,423 தொகை ஓய்வூதியம் அனுப்பப்பட்டிருந்தது. அவற்றில் ரூபா 581,916 தொகை ATM காட் ஒன்றினை பயன்படுத்தி அகற்றிக் கொண்டு இருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 திகதி வரை அத் தொகையினை பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்திருக்கவில்லை. | இந்த மோசடி மேற்கொண்டிருந்த நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக கம்பஹா விஷேட குற்ற அலகில் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டது. முறைப்பாட்டு இலக்கம் - 119/19(FCID) வழக்கு இலக்கம் - B25/2019 | - மேற்படி - |
| (ஓ) | தரவு முறைமையின் படி ஓய்வூதிய இலக்கம் 21-0-105353 கொண்ட ஓய்வூதியம் பெறுவோரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்திற்கு பதிலாக ஓய்வூதியம் பெறுவோரின் மகளின் தேசிய அடையாள அட்டை இலக்கம் பதியப்பட்டு ஓய்வூதியம் பெறுவோர் இறந்து 86 மாத காலம் கடக்கும் வரை ஓய்வூதியம் என ரூபா 1,562,470 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அந்தத் தொகையினை அவரின் மகளினால் பெறப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக சட்ட நடவடிக்கை அல்லது ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பான | அவ் ஓய்வூதியம் பெறுபவரின் மகளினால் மாதாந்தம் ரூபா 20,000 வீதம் செலுத்தப்பட்டு வருவதுடன் 2020 திசெம்பர் மாதம் அளவில் மேலும் அறவிடப்பட வேண்டியிருந்த மீதி ரூபா 1,116,336 தொகையாகும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | தகவல்கள் கணக்காய்விற்கு அறிவிக்கப்படாததுடன் இந்த மிகையாகச் செலுத்திய தொகையில் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,166,336 இற்கான தொகை ஒன்று மேலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | | |
| (ஔ) | கல்னேவ பிரதேச செயலகத்தின் பெண் ஓய்வூதிய உத்தியோகத்தரினால் இராணுவ விதவை ஒருவரின் கணக்கிற்கு உரிமை இல்லாத ரூபா 1,596,640 தொகை செலவு வைக்கப்பட்டு அந்த தொகையினை ஓய்வூதிய பெண் உத்தியோகத்தரினால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக ஒழுக்காற்கு விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டது என கணக்காய்விற்கு தகவல்கள் அறிவிக்கப்படாததுடன் 2012 ஒக்தோபர் 22 திகதி வரை ரூபா 1,000,000 தொகை அப் பெண் உத்தியோகத்தரினால் கல்னேவ பிரதேச செயலகத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. அந்தத் தொகையில் மேலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட தொகையினை 2020 திசெம்பர் 31 திகதி வரை அறவீடு செய்திருக்கவில்லை. | அந்த பெண் உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடாத்துவதற்கு 2020.09.30 திகதி அலுவல்கள் ஆரம்பிக்கபட்டிருந்துடன் உத்தியோகத்தர் வதியும் இடம் மற்றும் தொலைபேசி இலக்கம் மாற்றப்பட்டிருந்தமையால் குறிப்பிட்ட தகவல்களை பெற்றுக் கொண்ட பின்னர் அவளின் அடைக்கல உத்தியோகத்தரின் அனுமதி விண்ணப்பப் பத்திரம் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கும் படி அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இது வரை அந்த அனுமதிப் பத்திரம் அனுப்பப்படவில்லை. | பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் மற்றும் மிகைக் கொடுப்பனவுகள் அறவீடு செய்யப்பட வேண்டும் எனவும். |
| (க) | குருவிட பிரதேச செயலகத்தின் ஓய்வூதிய தரவு முறைமையில் தரவுகளை மாற்றம் செய்து நிலுவை ஓய்வூதியம் என பிரதேச செயலகத்திற்கு இணைக்கப்பட்டிருந்த கணக்காளரினால் 2009 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரை ரூபா 6,758,120 தொகை அவரின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இந்தத் தொகை 2020 திசெம்பர் 31 திகதி வரை அறவீடு செய்திருக்கவில்லை. | இந்த கணக்காளர் சேவையில் இருந்து அகற்றப்பட்டுள்ளார் என இரத்தினபுரி மாவட்ட செயலாளர் அறிவித்திருந்தார். | மோசடிகள் தொடர்பாக பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் கடைபிடிக்கப்பட்டு நிதிப் பிரமாணம் 103, 104 இன் பிரகாரம் பொறுப்புச் சொல்ல வேண்டியவரிடம் ஏற்பட்டிருந்த நட்டத்தை அறவீடு செய்யப்பட வேண்டும் என. |

**2.6 முற்பணங்கள் வழங்குதல் மற்றும் தீர்த்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கின் இணக்கக் கூற்றின் படி அத் திகதியில் உள்ளவாறு வேலை இடைநிறுத்தப்பட்டிருந்த, சேவையில் இருந்து விலகிச் சென்றுள்ள மற்றும் இடமாற்றம் சென்றுள்ள 12 உத்தியோகத்தரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த 5 வருட காலத்தை மிகைத்துள்ள நிலுவைத் தொகை ரூபா 718,350 தொகையாக காணப்பட்டதுடன் இந்த மீதியை கணக்காய்வுத் திகதி வரை தீர்த்துக் கொண்டு இருக்கவில்லை. | இடமாற்றம் பெற்றுள்ள 4 உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை பதிவழிப்பதற்காக கோரிக்கை கடிதம் ஒன்று அனுப்பப்பட்டிருந்ததுடன் இரண்டு உத்தியோகத்தர்களின் தற்போதைய தகவல்களை கோரி இணைந்த சேவை பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. மேலும் ஒரு உத்தியோகத்தர் குறிப்பிட்ட முகவரியில் காணப்படவில்லை என வத்தளை பிரதேச செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது. வேலை இடை நிறுதப்பட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவரின் சொத்துக்கள் தொடர்பான அறிக்கையின் படி ஆதனங்கள் ஏதும் காணப்படவில்லை என அறிவித்திருந்ததுடன் ஒரு உத்தியோகத்தருக்கு கடன் மீதியை செலுத்தும் படி மீண்டும் அறிவிக்கப்பட்டது. மேலும் இரண்டு உத்தியோகத்தர்கள் தொடர்பான ஒழுக்காற்று விசாரணை அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. சேவையை விட்டு சென்றுள்ள பெண் உத்தியோத்தர் வெளிநாடு சென்றுள்ளமையால் கடன் மீதியை அறவீடு செய்வதற்காக சட்டமா அதிபரிடம் வினப்பட்டுள்ளது. | நிலுவையாகக் காணப்படும் கடன் மீதிகளை தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என. |

| | | |
|---|---|---|
| (ஆ) 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திணைக்கள புத்தகங்களின் படி அரசாங்க உத்தியோகத்தருக்கான முற்பணக் கணக்கின் தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை ரூபா 168,586,842 தொகையும் கட்டுப்பாட்டுக் கணக்கின் படி அந்த மீதி ரூபா 168,558,187 தொகையும் காணப்பட்டமையால் அந்த மீதிகள் இடையே ரூபா 298,655 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் திணைக்களத்தினால் நி.பி. 427/1 பிரகாரம் திணைக்கள புத்தகங்கள், திறைசேரியின் கணினி அச்சுப் பிரதியுடன் இணக்கஞ் செய்து வித்தியாசம் ஒன்றும் காணப்படவில்லை என சான்றுபடுத்தியிருந்த போதிலும் அதன் படி அது சரியானதல்ல என அவதானிக்கப்பட்டது. | இந்த மீதிகள் திணைக்களத்தில் தற்போது சேவையாற்றும் மற்றும் சேவையாற்றிய உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த கடன் மீதிகள் ஆகும். இந்த இணங்கான முடியாத மீதிகளை கட்டுப்பாட்டுக் கணக்குடன் சீராக்கல் செய்து திறைச்சேரி புத்தகங்களின் மீதி, திணைக்கள புத்தகங்களின் மீதியுடன் சமப்படுத்துவதற்கு அரச கணக்குத் திணைக்களத்தினால் வழங்கியிருந்த அறிவுரையின் படி நடவடிக்கை எடுத்து தேவையான அங்கீகாரம் கிடைத்த பின்னர் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | திணைக்கள புத்தகங்கள், திறைசேரி கணினி அச்சுப் பிரதியுடனும் திணைக்கள புத்தகங்களின் படி தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை கட்டுப்பாட்டுக் கணக்கின் படி அந்த மீதியும் சமமாக இருக்க வேண்டும். வித்தியாசம் ஏதும் காணப்படின் காரணத்தை இனங்கண்டு சீராக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விதவைகள் அநாதைகள் ஓய்வூதியம் பெறுவோருக்கு தாமதமின்றி ஓய்வூதியம் வழங்குவதற்கு மேலதிகமாக அரை அரச வங்கி மற்றும் தனியார் பிரிவினருக்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மேலதிகமாக பங்களிப்பு செய்யும் ஓய்வூதிய முறைமை ஒன்று அறிமுகப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும் என 2020 பாதீட்டு மதிப்பீட்டில் காட்டப்பட்டிருந்த அதிவிஷேட முக்கியத்துவத்தின் படி இனங்கண்டிருந்த போதிலும் செயல் நடவடிக்கை திட்டத்தில் அந்த செயற்பாடுகள் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆண்டிற்காக திட்டவட்டமாக திட்டமிடப்பட்ட கருமங்களை உட்படுத்தி செயல் நடவடிக்கை திட்டம் தயாரிப்படுகின்றது. பங்களிப்பு ஓய்வூதியம் ஒன்று அறிமுகப்படுத்துவதற்காக நிகழ்ச்சித் திட்டம் ஒன்று 2020 செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் திட்டமிடப்பட்டிருக்காமையால் அந்த நிகழ்ச்சித் திட்டம் 2020 செயல் நடவடிக்கை திட்டத்தில் உட்படுத்தப்படவில்லை. பங்களிப்பு ஓய்வூதிய முறை ஒன்றினை அறிமுகப்படுத்துவதற்கான கட்டளை ஒன்று ஓய்வூதியத் திணைக்களத்திற்கு இது வரை கிடைத்திருக்கவில்லை. | பாதீட்டு மதிப்பீட்டில் காட்டப்பட்டுள்ள அதி விஷேட முக்கியத்துவத்தின் படி செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும் என. |

### 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த வருடாந்த செயலாற்றல் அறிக்கை மற்றும் அரசாங்க கணக்காய்வுப் பிரிவினால் ஒவ்வொரு பிரிவில் இருந்தும் பெற்றுக் கொண்ட தகவல்களை இணக்கஞ் செய்யும் போது அரசாங்க சேவை சேமலாப நிதியம் தொடர்பாக திசெம்பர் மாதத்தில் பெறுவனவின் பெறுமதி வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் படி ரூபா 61,399,468 தொகை எனினும் அந்த பிரிவில் இருந்து பெற்றுக் கொண்ட தகவல்களின் படி அது ரூபா 61,457,155 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 57,687 இற்கான வித்தியாசம் ஒன்றும், ஏப்ரல் மே மாதங்கள் தொடர்பாக கொடுப்பனவுப் பெறுமதி வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் படி ரூபா 38,364,041 தொகை மற்றும் அந்த பிரிவில் இருந்து பெற்றிருந்த தகவல்களின் படி ரூபா 22,364,041 ஆகக் காணப்பட்டமையால் ரூபா 16,000,000 இற்கான வித்தியாசம் ஒன்றும் வட்டி வருமானம் வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் படி ரூபா 30,360,072,498 தொகை எனினும் அந்தப் பிரிவில் இருந்து பெற்றுக் கொண்ட தகவல்களின் படி அது ரூபா 31,562,748,355 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 1,202,675,857 இற்கான வித்தியாசம் ஒன்றும், சிவில் மற்றும் படைச் சேவை பணிக்கொடை கொடுப்பனவு, வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் படி எண்ணிக்கை 24,149 தொகையும் மற்றும் பெறுமதி ரூபா 26,237,294,814 தொகை எனினும் அந்தப் பிரிவில் இருந்து பெற்றிருந்த தகவல்களின் படி எண்ணிக்கை 24,524 தொகை மற்றும் பெறுமதி ரூபா 26,808,301,923 தொகையாக காணப்பட்டமையால் எண்ணிக்கையில் 375 தொகையும் மற்றும் பெறுமதியில் ரூபா 571,007,109 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | நிதிக் கூற்றுக்களுடன் பெப்ரவரி மாதம் 28 இற்கு முன்னர் வருடாந்த செயலாற்றல் அறிக்கை என வரைபு ஒன்று மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் வருடாந்த செயலாற்றல் அறிக்கை குறைபாடுகள் இன்றி தயாரிக்கப்பட்டிருந்தது என. | வருடாந்த செயலாற்றல் அறிக்கைக்கு சரியான தரவுகள் உட்படுத்தப்பட வேண்டும் என. |

**3.3 பெறுகைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------------------ | ------------------------------------------ | ------------------------- |
| (அ) | நிதிப் பிரமாணம் 701(i) பிரகாரம் ஒப்பந்த வேலை என்றால் முடிவு செய்யும் காலம் மற்றும் தாமதத்திற்காக கணிக்கக்கூடிய நட்டம் ஆகிய விடயங்களை உட்படுத்தி இருக்கவேண்டும் என காட்டப்பட்டிருந்த போதிலும் நிர்மாண வேலை ஒப்பந்த வேலைகள் தொடர்பாக தெரிவுப் பரிசோதனையின் போது உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த கிரயம் ரூபா 5,909,881 தொகைக்காக 3 நிர்மாண வேலை ஒப்பந்த வேலைகள் தொடர்பான ஒப்பந்த வேலை உடன்படிக்கைகளில் இந்த வாசகம் உட்படுத்தியிருவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும் பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.12.2 பந்தியின் படி விவரக் குறிப்பு மற்றும் இணங்கியிருந்த ஏனைய சாட்டுதல்கள் மற்றும் நிபந்தனைகளுடன் இணக்கியிருக்கின்றது என சான்றுபடுத்தி வேலை பூர்த்தி செய்தல் சான்றிதழ் பொறியியலாளர்/ உசாத்துணையாளரினால் வழக்கப்பட வேண்டும் என காட்டப்பட்டிருந்த போதிலும் இந்த ஒப்பந்த வேலை தொடர்பாக அவ்வாறான சான்றிதழ் ஒன்று வழங்கியிருக்கவில்லை. | உடன்படிக்கையின் 07 ஆவது பிரிவின் மூலம் குறிப்பிட்ட விடயங்கள் காட்டப்பட்டுள்ளன. | நிதிப் பிரமாணம் 701(i) பிரகாரம் செயற்பட வேண்டும் என. |
| (ஆ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.14.1 பின்னிணைப்பு (Supplementary) 35 இல் 2 ஆம் பந்தியின் பிரகாரம் நிர்மாண வேலை ஒப்பந்த வேலைகளுக்காக கூறுவிலைகள் அழைத்தல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடம் மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. எனினும் திணைக்களத்தினால் களனி வெதமுள்ள விடுமுறை இல்லத்தின் நவீனமயப்படுத்தல் மற்றும் பராமரிப்புக்காக ஒப்பந்தகாரர் ஒருவரை தெரிவு செய்யும் போது தொலைபேசி பெயர் பட்டியலில் காணப்படும் மஞ்சள் நிற மற்றும் வானவில் நிற பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள | ஒப்பந்தகாரர்கள் தெரிவு செய்யும் போது வரையறுக்கப்பட்ட கூறுவிலைகள் அழைக்கப்பட்டிருந்ததுடன் அதன் படி தொலைபேசி பெயர் பட்டியலில் மஞ்சள் நிற மற்றும் வானவில் நிற பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள 06 நிறுவனங்களில் இருந்து கூறுவிலைகள் அழைக்கப்பட்டிருந்தன. தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழுவின் பரிந்துரையின் படி குறைந்த | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நிர்மாண வேலை ஒப்பந்த வேலைகளுக்காக கூறுவிலைகள் அழைத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும் என. |

| | |
|---|---|
| நிறுவனங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் ஒருவரிடம் இருந்து 3 கூறுவிலைகள் அழைக்கப்பட்டிருத்தல், கூறுவிலைகள் அழைக்கும் போது நியம கூறுவிலை பதிவேடு பயன்படுத்தி இருக்காமை, செயலாற்றல் பாதுகாப்பு முறி சமர்ப்பித்திருக்காமை, ஒப்பந்த உடன்படிக்கை நியம கூறுவிலை அழைப்புப் பதிவேட்டின் படி சமர்ப்பித்திருக்காமை ஆகிய குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. | கூறுவிலைகள் சமர்ப்பித்திருந்த Irosh Construction நிறுவனத்திற்கு ஒப்பந்த வேலை வழங்கப்பட்டிருந்தது. இந்த நிறுவனம் இதற்கு முன்னர் ஓய்வூதிய திணைக்களத்தின் ஒப்பந்த வேலைகளை உரிய நியமங்களின் படி மேற்கொள்ளப்பட்டிருந்தது. கொடுப்பனவு செய்யும் போது 5% இற்கான தடுத்து வைத்தல் பணம் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் ஒப்பந்த வேலைகள் வழங்கும் போது செயலாற்றல் பாதுகாப்பு முறி பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். |

### 3.4 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் ஒன்றின் படி மீளாய்வாண்டு இறுதியளவில் மிகையாக செலுத்தியிருந்த ஓய்வூதியத்தில் மேலும் அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 521 மில்லியன் தொகையாகும். இந்த மீதி, 10 வருடங்களை விட மிகையான காலம் முதல் காணப்படும் ரூபா 4.8 மில்லியன் தொகையும், 5-10 வருடங்கள் இடைப்பட்ட வீச்சில் காணப்படும் ரூபா 66 மில்லியன் தொகையும், 5 வருடங்களை விட குறைந்த காலத்தில் அறவிடப்பட வேண்டிய ரூபா 450 மில்லியன் தொகையையும் அடங்கியிருந்தது. | தவணைப் பணங்கள் அவர்கள் பெற்றுக் கொள்ளும் ஏனைய ஓய்வூதியங்கள், வயது, மிகைக் கொடுப்பனவுப் பெறுமதி மற்றும் கோரிக்கைகள் ஆகிய விடயங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதினால் மிகைக் கொடுப்பனவுகள் அறவீடு செய்வதில் கால தாமதம் ஒன்று காணப்பட்டது. | அறவிடப்பட வேண்டிய ஓய்வூதிய மிகைக் கொடுப்பனவுகளை தாமதம் இன்றி அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என. |

### 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கனேவத்த பிரதேச செயலகத்தினால் இலக்கம் 4-50111 கொண்ட ஓய்வூதியம் பெறுவோரின் ரூபா 6,855 தொகைக்கான மாதாந்த வாழ்க்கைப் படி ரூபா 20,860 வீதம் 2015 ஜூலை 01 முதல் 2020 ஆகஸ்ட் 10 திகதி வரையான காலப்பகுதியில் ரூபா 687,790 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்ததுடன் 2021 ஜூன் மாதம் அளவில் மேலும் அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 559,236 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை. | ஓய்வூதியம் பெறுவோருக்கு மிகையாக செலுத்தியிருந்த மொத்த வாழ்க்கைப் படி ரூபா 687,790 தொகையாகும். 2020 செப்தெம்பர் முதல் 2021 ஜூன் மாதம் வரை அவரின் ஓய்வூதியம் நிறுத்தப்பட்டிருந்தமையால் நிலுவை சம்பளமாகிய ரூபா 128,554 இற்கான தொகை பதிலீடு செய்த பின்னர் மேலும் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 559,236 ஆகும். நி.பி. 104 விசாரணை ஒன்று மேற்கொள்ளும் படி பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | ஓய்வூதிய மிகைக் கொடுப்பனவு தொடர்பாக நிதிப் பிரமாணம் 103, 104 இன் படி செயற்பட்டு மிகைக் கொடுப்பனவுகளை அறவீடு செய்யவேண்டும் என. |
| (ஆ) | அலுவலக வளவில் 2868 சதுர அடி தரைப் பகுதி ஒன்று 5 அலுவலகங்களுக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த போதிலும் வாடகை உடன்படிக்கைகள் மேற்கொண்டிருக்காததுடன் வாடகை அடிப்படையில் நடாத்தப்படுகின்ற 4 நிறுவனங்களில் வாடகை உடன்படிக்கை காலம் முடிவடைந்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதி வரை அந்த உடன்படிக்கைகளை புதுப்பித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தபால் அலுவலகத்துடன் உடன்படிக்கை மேற்கொள்வதற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அரச சேவை வழங்கும் நிறுவனம் ஒன்றென கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் இருந்து வாடகை செலுத்துவதற்கு முடியாது என மாவட்ட செயலாளர் அறிவித்திருந்தார். இலங்கை வங்கி டெலர் இயந்திரத்திற்காக உடன்படிக்கை மேற்கொள்வதற்கு ஒன்று இலங்கை வங்கிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. வாடகை உடன்படிக்கைக்கு காலம் முடிவடைந்துள்ள நிறுவனங்களுக்கு உடன்படிக்கைகளை புதுப்பிப்பதற்காக வரைபு உடன்படிக்கைகள் உரிய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | அலுவலக வளவில் வாடகை அடிப்படையில் வழங்கியுள்ள நிறுவனங்களுடன் வாடகை உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அனைத்து ஓய்வூதியம் பெறுவோருக்கும் ஓய்வூதியக் கோவைகள் பேணப்பட்டு வர வேண்டியிருந்த போதிலும் தெரிவுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டவாறு திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தின் 369 ஓய்வூதியம் பெறுபோரின் ஓய்வூதிக் கோவைகள் காணாமல் போயிருந்தன. | ஓய்வூதியக் கோவைகள் காணப்படாத 369 பேருக்காக தற்காலிக ஓய்வூதியக் கோவைகள் தயாரிப்பதற்கு தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்கும் படி ஓய்வூதியம் பெறுவோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். | ஓய்வூதியம் பெறுவோரின் ஓய்வூயக் கோவைகளை பேணிச் செல்லல் மற்றும் பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் ஓய்வூதியத் திணைக்கள உத்தியோகத்தர்களின் கருமம் ஒன்றாக காணப்படுவதனால் ஓய்வூதிய உத்தியோகத்தர் இடையே கோவைகள் எழுத்துமூலம் சாட்டுதல் செய்தல் இடமாற்றத்தின் போது அவற்றை உரிய முறையில் வேறு உத்தியோகத்தருக்கு சாட்டுதல் செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும் என கோவைகள் பாதுகாப்பாக வைத்திருக்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். மற்றும் தற்காலிக கோவைகள் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும் என. |
| (உ) | ஓய்வூதியத் தரவு முறைமையில் 2020 செப்தெம்பர் மாதத்தின் கொடுப்பனவு தரவு முறைமையை பரிசோதனை செய்த போது 2017 ஜனவரி 01 திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்றிருந்த அனைத்து அரச உத்தியோகத்தர்களின் ஓய்வூதியம் பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 மற்றும் 14/2019 படி சீராக்கல் மேற்கொள்ளல் 2019 ஜூன் 11 திகதிய இலக்கம் 01/2019 ஓய்வூதிய சுற்றறிக்கையின் மூலம் 2019 ஜூலை 01 திகதி முதல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் காணப்படாமை, யுத்தம் மற்றும் ஏனைய காரணங்களினால் கோவைகள் காணாமல் போதல் சம்பளங்கள் தொடர்பான சிக்கல்கள் போன்ற காரணங்களினால் 2021 | 479,415 ஓய்வூதியம் பெறுவோரின் சம்பள திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 39,373 ஓய்வூதியம் பெறுவோரின் சம்பள திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. கோவைகளில் பதிவேடு பல்வேறு குறைபாடுகள் காணப்பட்டமையினால் அந்தத் சீராக்கல்கள் தாமதம் அடைந்ததென அவதானிக்கப்பட்டது. (தேசிய அடையாள அட்டை இலக்கம் இன்மை மற்றும் யுத்தம் மற்றும் ஏனைய காரணங்களினால் கோவைகள் காணாமல் போதல், சம்பளங்கள் தொடர்பான சிக்கல்கள்) | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |

ஜனவரி 13 திகதி அளவில் ஓய்வூதிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமல் காணப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை 39,373 தொகையாக இருந்தது.

## 3.6 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்காக பங்களிப்புச் செலுத்தியுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பாக தரவு முறைமை ஒன்று பேணிச் செல்வதற்கு ஓய்வூதியத் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. நலன்கள் பெற்றுக்கொள்வதற்கு உரிய அங்கத்தவர்கள் தொடர்பாக சரியான தகவல்கள் காணப்படாமையால் விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய முறைமைக்காக உரிமை மற்றும் பங்களிப்புத் தொகை திருப்பிச் செலுத்துதல் ஆகிய நலன்கள் உரித்தாக்கும் போது பங்களிப்புத் தொகை நிச்சயிக்கப்பட்டவாறு தொடர்ச்சியாக கிடைத்துள்ளதா என திணைக்களத்தின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முடியாமல் இருந்தது. | அனைத்து அரச உத்தியோகத்தர்களினதும் தரவுகள் நிகழ்வு நிலை நடைமுறையின் மூலம் உட்படுத்தக் கூடிய நிகழ்ச்சித் திட்டம் ஒன்று 2017 ஒக்தோபர் மாதம் முதல் அறிமுகப்படுத்தியிருந்த போதிலும் ஏனைய நிறுவனங்களில் ஒத்துழைப்பு இன்மையால் செயற்படுத்துதல் செயலிழந்து காணப்பட்டது. அறவீட்டு விபரங்கள் இறுதியாக கடமையாற்றிய நிறுவனத்தில் இருந்து சான்றுபடுத்திய பின்னர் ஓய்வூதியம் செலுத்துதல் ஆரம்பிப்பதற்காக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு பெற்றுக் கொள்வதுடன் திருப்பி செலுத்தும் போது குறிப்பிட்ட சதவீதத்தின் படி அறவீடு செய்யப்பட்டதா என பரிசோதனை செய்யப்படுகின்றது. | பங்களிப்பாளர்கள் மற்றும் பங்களிப்பு கொடுப்பனவு தொடர்பாக தரவு முறைமை ஒன்று தொடர்புடைய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் ஓய்வூதியத் திணைக்களத்தினால் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் படி திட்டமிடப்பட்ட, நிதிக் கட்டுப்பாட்டு நடைமுறை தொடர்பாக ஆரம்ப பரிசோதனை, விடுமுறைகள் மற்றும் மேலதிக நேர பரிசோதனை பொது மக்களின் முறைப்பாடுகள் மற்றும் பெடிசன்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் ஆகிய செயற்பாடுகள் ஓய்வூதியத் திணைக்களத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தியிருக்கவில்லை. மேலும் 2020 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த உள்ளக கணக்காய்வுத் திட்டத்தில் வருமானம் சேகரித்தல் பரிசோதனை, பயிற்சி தொடர்பான செயற்பாடுகளை பரிசோதனை செய்தல், நிர்மாண வேலை ஒப்பந்த வேலைகள் மற்றும் கொள்வனவு செய்தல் பரிசோதனை ஆகிய துறைகள் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை. | ஓய்வூதியத் திணைக்களத்தினால் வருடாந்தம் ஓய்வூதியம் செலுத்துவதற்காக அண்ணளவாக ரூபா 240 பில்லியன் செலவிடப்படுவதனால் இந்த கொடுப்பனவு தொடர்பாக கூடிய கவனம் செலுத்தப்படுவதனால் உள்ளகக் கணக்காய்வில் இது தொடர்பாக கூடிய கவனம் செலுத்தப்படுகின்றது. எனினும் அரசாங்க கணக்காய்வினால் சுட்டிக் காட்டியுள்ளவாறு கணக்காய்வுத் திட்டத்தில் உட்படுத்தி கணக்காய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் திணைக்களத்தின் அனைத்து செயற்பாடுகளையும் உள்ளடக்கக் கூடிய விதமாக தயாரிக்கப்பட வேண்டும் என. |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் ஒன்று மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | 2020 ஆண்டின் போது COVID தொற்று நோய் நிலைமை காரணமாக திட்டமிடப்பட்டிருந்த கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்துவதற்கு முடியாமல் போனது. 2021 முதலாவது காலாண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் 2021.04.30 திகதி நடாத்தப்பட்டது. | ஒரு ஆண்டில் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும் என. |